

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஏப்ரல் 27, 2017 | புரட்சி 16 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00

## ‘மத நம்பிக்கைகளை புண்படுத்தக் கூடாது’ என்ற சட்டப் பிரிவை எதற்கெடுத்தாலும் பயன்படுத்தக் கூடாது

# உச்சநீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்பு

கடவுள் – மதம் குறித்து கருத்துகளை தெரிவிப்பதே சட்டவிரோதம் என்று கூப்பாடு போடும் ‘இந்துத்துவ’ சக்திகளுக்கு கடிவாளம் போடும் முக்கிய தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

மதத்தைப் புண்படுத்தும் பேச்சு, செயல்பாடுகள் தண்டனைக்குரிய குற்றமாக சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டத்தில் 295(ஏ) பிரிவை மதவாதிகள் பாதுகாப்பு அரணாக முறை கேடாகப் பயன்படுத்துகிறார்கள். மகாபாரதத்தை நடிகர் கமலஹாசன் விமர்சித்தார் என்பதற்காக மத உணர்வை புண்படுத்திவிட்டதாக நீதிமன்றம் போகிறார்கள். பெண்கள் அடிமைச் சின்னமான தாலியை அகற்றும் நிகழ்ச்சி நடந்தால் மத உணர்வை புண்படுத்துவதாக வழக்கு தொடருகிறார்கள். மதத்தை, கடவுளை, அறிவியல் சமூகக் கண்ணோட்டத்தில் விமர்சனம் செய்யும் கருத்துரிமையையே இந்த சட்டப் பிரிவைப் பயன்படுத்தி பறிக்கிறார்கள். எம்.எஸ். தோனி என்ற கிரிக்கெட் விளையாட்டு வீரரை ‘மகாவிஷ்ணு’வாக சித்தரித்து, ஒரு வர்த்தக பத்திரிகை 2013இல் அட்டைப்படம் போட்டிருந்தது. இந்து மதத்தைப் புண்படுத்தி விட்டதாக தோனி மீது ஆந்திர மாநிலம் அனந்தப்பூரில் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப் பட்டது. இதை எதிர்த்து தோனி, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் கடந்த ஏப்.2 ஆம் தேதி கிரிமினல் நடவடிக்கையை நீக்கம் செய்து முக்கிய தீர்ப்பை வழங்கியிருக்கிறது. நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ஏ.எம். கான்வில்கர், எம்.எம். சந்தான கவுடா ஆகியோர் அடங்கிய அமர்வு-295(ஏ) சட்டப் பிரிவு வரையறைக்கு உட்பட்டது. கண்மூடித்தனமாக இந்த சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்த முடியாது என்று தீர்ப்பளித்துள்ளனர். “மத உணர்வை புண்படுத்தி விட்டார்கள்” என்று எல்லாவற்றுக்கும் ‘புண்படுத்துதலை’ பயன்படுத்திவிட முடியாது. ஒரு கருத்தாக, விமர்சனமாக உள்நோக்கம் இல்லாமல் வெளிப்படுத்தும் கருத்துகளுக்கு இந்த சட்டப் பிரிவைப் பயன்படுத்த முடியாது. (“Insults to religion offered unwillingly or carelessly or without any deliberate or malicous intention to outrage the religious feelings of that class do not come with the section”)

“திட்டமிட்ட உள்நோக்கத்தோடு ஒரு மத வகுப்பாரை ஆத்திரப்படுத்தி அவமதிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே வெளிப்படுத்தும் கருத்துகள்தான் ‘மத உணர்வைப் புண்படுத்தும்’ என்ற பிரிவுக்குள் கொண்டு வர முடியும்”

- என்று நீதிபதிகள் தீர்ப்பு அளித்துள்ளனர். சமூக வலைதளங்களில் ‘புண்படுத்தும்’ கருத்துகளைத் தடை செய்யும் தகவல் தொடர்பு சட்டப் பிரிவை (66ஏ) ஏற்கனவே உச்சநீதிமன்றம் முழுமையாக நீக்கி அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து இப்போது ‘295ஏ’ பிரிவுக்கும் கடிவாளம் போட்டிருக்கிறது.

ஏற்கனவே 1957ஆம் ஆண்டே உச்சநீதிமன்றம் இதே கருத்தை இந்த சட்டப் பிரிவு தொடர்பாக தெளிவுபடுத்திய பிறகும் சட்டப் பிரிவை முறை கேடாகப் பயன்படுத்தும் வழக்குகள் வந்து கொண்டே இருந்தன. “மதம் - மதம் சார்ந்த நம்பிக்கைகளுக்கு எதிரான எல்லா கருத்துகளையும் இந்த சட்டப்பிரிவுக்கு எதிரானது என்று கூறவே முடியாது” என்று 1957இல் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தெளிவுபடுத்தியது.

2014ஆம் ஆண்டு திரைப்பட நடிகர் சல்மான்கான் மீது ஒரு வழக்கு வந்தது. அவர் நடத்தும் தொண்டு நிறுவனம் நடத்திய ஆடை அலங்கார அணி வகுப்பில் பங்கேற்ற ஒருவர் அணிந்திருந்த ‘டி’ சட்டையில் அரபு சொற்கள் எழுதப்பட்டிருந்ததால் இஸ்லாமிய மத உணர்வைப் புண்படுத்திவிட்டதாக சல்மான்கான் மீது வழக்கு தொடரப்பட்டது. 2016இல் பல இந்தி திரைப்பட நடிகர்கள் இதே போன்ற வழக்குகளை சந்தித்தனர். தமிழ் நாட்டிலும் பெரியார் இயக்கத்தினர் மீது மத உணர்வுகளை புண்படுத்துவதாக மதவெறி சக்திகள் போராட்டங்களையும் நடத்துவது வாடிக்கையாகிவிட்டது.

இப்போது உச்சநீதிமன்றம் எல்லாவற்றுக்கும் ‘கடிவாளம்’ போட்டுள்ளது.

## “மாட்டுக்கறி உணவு விழா” கழகத் தலைவர் அறிக்கை

தோழர்களுக்கு வணக்கம்!

முதல் செய்தி 23.04.2017 அன்று காவல்துறையினரின் அனுமதி மறுப்பால் கொளத்தூர், பெரியார் படிப்பகத்தில் நடைபெறுவதாக இருந்த மாட்டுக்கறி விருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதாகும். நீதிமன்றத்தை அணுகி உடனடியாக அனுமதி பெறுவதற்குப் போதிய கால இடைவெளி இல்லாத காரணத்தால் பின்னொரு தேதிக்கு அனுமதிபெற்று சிறப்பாக நடத்திக் கொள்ளலாம்.

மாட்டுக்கறி விருந்து கொளத்தூரில் நடந்தால் ஈரோட்டில் பெரியார் சிலைக்கு “ஏதோ” மாலை அணிவிக்க உள்ளதாக சில இந்து இயக்கங்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அவ்வாறு “மாலை மரியாதை” செய்ய வருவோருக்கு “நல்ல முறையில்” வரவேற்பளித்து, உரிய பதில் மரியாதை அளிக்க வேண்டியது நமது கடமையாகும். எனவே, மாட்டுக்கறி (அவர்கள் மொழியில், பசு மாமிசம்) விருந்தினை, அவர்கள் (இந்து இயக்கங்கள்) வசதிக்காகவும், அவர்கள் ஈரோடு பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்க வரும்பொழுது சிறு காலதாமதமும் இன்றி வரவேற்று, பதில் மரியாதை செய்வதற்கு வாய்ப்பாகவும், 30-4-2017 அல்லது 1-5-2017 அன்று நண்பகல் ஈரோட்டில் ”பெரியார் மன்றத்தில்” அல்லது அருகாமையில் உள்ள ஒரு மண்டபத்தில் (விரைவில் இடம் உறுதி செய்யப்படும்) விருந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது இரண்டாவது செய்தியாகும். விருந்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நுழைவுக் கட்டணம் ரூ. 50/- (அம்பது ரூபாய்) செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பது கூடுதல் செய்தியாகும்.

அதுபோலவே சேலத்தில் உள்ள இந்து இயக்கங்களும் பெரியாருக்கு “மாலை மரியாதை” செய்ய விரும்பினால் அவர்களுக்கும், பதில் மரியாதை செய்ய நமது தோழர்களுக்கும் வாய்ப்பளிப்பதற்காக, சேலம், 27/3, இராஜாரம் நகரில் (காந்தி விளையாட்டு அரங்கத்தின் கிழக்குப்புற சாலையில்) அமைந்துள்ள எஸ்.எஸ்.ஆர் திருமணக் கூடத்தில் 09.05.2017 செவ்வாய்க்கிழமை நண்பகல் மாட்டுகறி விருந்து சேலம் மாவட்டக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது மூன்றாவது செய்தியாகும். விருந்தில் கலந்து கொள்ள விரும்புவர்கள் நுழைவுக் கட்டணம் ரூ. 50/- (அம்பது ரூபாய்) செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

கொளத்தூரில் விருந்து இல்லாமல் போனதற்கு மனவருத்தம் கொள்ளாமல் கிடைத்துள்ள இவ்விரண்டு வாய்ப்புகளையும் குடும்பத்தினரோடு கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். உடன்பாடுள்ள தோழர்களுக்கும், அமைப்புகளுக்கும் செய்தியைச் சேர்ப்பிக்குமாறும் அழைத்து வருமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**(ஈரோடு பெரியார் மன்றத்தினர் இடம் கொடுக்க மறுத்துவிட்டதால் ஈரோடு சத்தி முதன்மைச் சாலையில் உள்ள வி.பி.வி. திருமணக் கூடத்தில் 2.5.2017 அன்று மாற்றி வைக்கப்பட்டுள்ளது)**

– **கொளத்தூர் மணி**, தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

## வழிபாட்டுத் தலங்களில் ஒலி பெருக்கி அலறலுக்கு கண்டனம்: மதவாத மிரட்டலுக்கு திரைப்படப் பாடகர் பதிலடி

சோனுநிகாம், பிரபல இந்தி திரைப்படப் பாடகர். பிறப்பால் சீக்கியர். மசூதி, கோயில், குருத்துவாராவில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தி, மக்களுக்கு இடையூறு செய்வது ‘கட்டாய மதத் திணிப்பு’ என்று டிவிட்டரில் பதிவிட்டிருந்தார். மசூதிகளில் தொழுகைக்கு அழைப்பதில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதையும், கட்டாய மதத் திணிப்பு என்று அவர் கூறியிருந்தார். இதற்கு மதவாதிகளிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வரத் தொடங்கின. ஒரு இஸ்லாமிய மதக்குரு, சோனு நிகாமுக்கு எதிரான தண்டனையை அறிவித்திருந்தார். மேற்கு வங்கத்தில் மைனாரிட்டி ஒருங்கிணைப்புக் குழு துணைத் தலைவராக இருப்பவர் சையத் ஷா அதொஃப் அலி அல் கொய்தாரி. அவர்வெளியிட்ட தண்டனை அறிவிப்பு இவ்வாறு கூறியது:

சோனு நிகாம் தொழுகைக்கான ஒலி பெருக்கி அழைப்புக்கு (அசான்) எதிர்ப்பு தெரிவித்துள்ளதால், “அவர் தலையை மொட்டை அடித்து, கழுத்தில் கிழிந்துபோன செருப்பு மாலை போட்டு நாடு முழுதும் அதே கோலத்தில் அவரை இழுத்து வருவோருக்கு ரூ.10 இலட்சம் பரிசு தருகிறேன்” என்று அறிவித்திருந்தார். கடந்த ஏப்.18ஆம் தேதி அந்த அறிவிப்பு வந்தவுடன் அடுத்த நாள் ஏப்.19ஆம் தேதி, நிகாம், ஆலிம் எனும் முடிதிருத்தும் கலைஞரை தனது வீட்டுக்கு அழைத்து மொட்டை அடித்துக் கொண்டார். பிறகு டுவிட்டரில் இவ்வாறு பதிவிட்டார்:

“இன்று ஆலிம் என் வீட்டுக்கு வந்து எனக்கு மொட்டை அடித்திருக்கிறார். நீங்கள் அறிவித்த 10 இலட்சம் ரூபாயை ஆலிமுக்கு வழங்க தயாராக எடுத்து வைக்கவும்” என்று அந்த இஸ்லாமிய மத குருவுக்கு பதிவிட்டார். பிறகு மொட்டை அடித்த கோலத்தில் செய்தியாளர்களிடம் பேசினார். பிரபல முடி திருத்தும் கலைஞர் ஆலிம் ஹக்கீரும் (இவர் ஒரு இஸ்லாமியர்) உடனிருந்தார்.



“எனக்கு ஏராளமான முஸ்லிம் நண்பர்கள் உண்டு. பிரபல பாடகர் முகமது ரஃபியை எனது தந்தையாக நான் மதிப்பவன். குலாம் முஸ்தாபாகான், முகம்மது தாஃஹிர் ஆகியோரை எனது குருக்களாக மதிப்பவன். எனக்கு பாடல் பயிற்சி தருபவரும், ஓட்டுனராக இருப்பவரும் இஸ்லாமியர்கள்தான். இவர்கள் எல்லோருமே தங்கள் வீடுகளில்தான் தொழுகை நடத்துகிறார்கள். ஒலி பெருக்கி அழைப்பை ஏற்று மசூதிக்குப் போவது இல்லை. இவர்களையும் இஸ்லாமிய எதிரிகள் என்று முத்திரை குத்துவீர்களா ?” என்று நிகாம் கேட்டார்.

“மதத்தின் பெயரால் ஒலிபெருக்கிகளை அலறவிடுவது மக்களுக்கு தொல்லையாக இருப்பதை நான் தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறேன். இப்போதும் அந்தக் கருத்தில் உறுதியாக இருக்கிறேன். மதத்துக்கு ஒலிபெருக்கிகள் கட்டாயத் தேவையல்ல; நான் கோயில்களுக்கும், குருத்துவாராவுகளுக்கும் சேர்த்துதான் இதைக் கூறுகிறேன். இந்து திருவிழாக்களில் திரைக் கலைஞர்களை

(4ஆம் பக்கம்)

# பசுவதை தடை சட்டம் கோருவது அரசியல் சட்டத்தின் நோக்கத்தையே சிதைப்பதாகும்

*பசுவதை தடை சட்டத்தை மாநில அரசுகள் இயற்ற வேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் நோக்கத்துக்கே எதிரானது என்பதை விளக்கி, 'இந்து' ஆங்கில நாளேட்டில் வெளி வந்த கட்டுரையில் இடம் பெற்றுள்ள கருத்துகள்.*

அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நோக்கத்தி லிருந்து விலகிப் போய் நீதிமன்றம் சட்டத்துக்கு மாறான தீர்ப்புகளை வழங்கி வருகிறது என்பதற்கு, ஒரு உதாரணம், 'பசுவதைத் தடைச் சட்டம்' குறித்து 2005ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பு என்று உச்சநீதிமன்ற வழக்கறிஞர் சஞ்சய் ஹெக்டே 'இந்து' ஆங்கில நாளேட்டில் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்.14 அன்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

மக்களின் பாதுகாப்புக்காக உறுதி செய்யப்பட்ட சட்டங்களை அதன் நோக்கத்திலிருந்து திரித்து விடுவதும் அதிலிருந்து விலகி நின்று முடிவுகள் எடுப்பதும் கடும் எதிர்விளைவுகளை உருவாக்கி விடும் என்று கட்டுரை எடுத்துரைக்கிறது. இதற்கு அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா'வை உதாரணம் காட்டியிருக்கிறார் கட்டுரை யாளர். 1986ஆம் ஆண்டு 'நாசா சேலஞ்சர்' என்ற விண்வெளி ஆய்வு விமானம் (Space shuttle) ஒன்றை 7 பேருடன் அனுப்பியபோது அது வெடித்துச் சிதறி, 7 பேரும் பலியானார்கள். அந்த ஆய்வு விமானத்தை வடிவமைக்கும் ஒப்பந்தத்தை தனியார் நிறுவனத் திடம் நாசா வழங்கியது. உரிய பாதுகாப்புகளுடன் அது வடிவமைக்கப்படாததே விபத்துக்குக் காரணம் என்பது விசாரணையில் தெரிய வந்தது. வழக்கமாக பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு தரக் கட்டமைப்பு களிலிருந்து நாசா விலகிப் போனதும் ஆபத்துகள் இருந்தால் அதை சந்திக்கத்தான் வேண்டும் என்ற அலட்சிய மனநிலைக்கு நாசா விஞ்ஞானிகள் வந்திருந்ததுமே இதற்குக் காரணம் என்று விசாரணையில் தெரிந்தது. இந்த உதாரணத்தோடு கட்டுரையாளர் பசுவதைத் தடுப்புக் குறித்து உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பையும் அரசியல் நிர்ணய சபையில் இது குறித்து நடந்த விவாதங்களையும் அக்கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

1948ஆம் ஆண்டு அம்பேத்கர் எழுதி வெளியிட்ட 'தீண்டப்படாதவர்கள் யார்? அவர்கள் எப்படி தீண்டப்படாதவர்கள் ஆக்கப்பட்டார்கள்' என்ற நூலில் செத்த மாட்டை சாப்பிடும் வழக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டதே தீண்டாமைக்கு அடிப்படையான காரணமாக இருந்தது என்பதை விளக்குகிறார். புத்த மார்க்கத்துக்கு மாறிய பிறகும் தீண்டப்படாத மக்கள் மாட்டுக்கறியை உண்ணும் வழக்கத்தைப் பின்பற்றினார்கள். அவர்கள் மீது வெறுப்பை உண்டாக்குவதற்கு பார்ப்பனர்கள் இந்த மாட்டுக்கறி உண்ணும் பழக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். புத்த மதம் மாறிய தீண்டப் படாதவர்களை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்ற பார்ப்பனர்களின் உணர்வு தான் பசுவைப் புனிதமாகப் போற்ற வேண்டும் என்று பேசும் நிலைக்கு அவர்களை கொண்டு சென்றது. 'பசுப் புனிதத் தத்துவத்தின்' அடிப்படையே தீண்டப்படாதவர் களின் மீதான வெறுப்பில் உருவானதுதான் என்ற கருத்தை அம்பேத்கர் நிறுவுகிறார்.

அரசியல் நிர்ணய சபையில் பசுவைப் பாதுகாக்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்தியபோது அவையில் அம்பேத்கர் அவர்களுக்கு எதிராக பேசுவதை தவிர்த்துக் கொண்டார். பசுப் பாதுகாவலர்கள் ஆவேச எதிர்ப்புகளை அவர் அமைதியாகவே எதிர் கொண்டார்.

1948 பிப்ரவரியில் அரசியல் நிர்ணய சபையில் சட்ட வரைவு மசோதாவை அம்பேத்கர் முதலில் தாக்கல் செய்த போது அதில் பசு பாதுகாப்பு குறித்து எந்த அம்சமும் இடம் பெறவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். சில தீவிர 'பசுப் பாது காவலர்கள்' அவையில் பசுவைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அதை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அம்பேத்கரும் அவரோடு இணைந்து பணியாற்றிய வரைவுக் குழுவினரும் பசுப் பாதுகாப்புப் பிரிவை அரசியல் சட்டத்தில் இணைக்காமல் அரசியல் சட்டத்துக்கான வழி காட்டும் கொள்கைகளில் (Directive Priniciple) இணைத்துக் கொள்ளலாம் என்ற உடன்பாட்டுக்கு வந்தனர். வழிகாட்டும் கொள்கை களுக்கு சட்ட அங்கீகாரம் கிடையாது. அரசியல் சட்டம் எந்தத் திசையில் எதிர்காலத்தில் பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்தை விவரிப்பவை.

வழக்கறிஞரும் வைதீகப் பார்ப்பனருமான பண்டிட் தார்குன்ட பார்கவா என்பவர் இதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். விவசாயத்தையும் அதற்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளையும் எதிர்காலத்தில் வளர்ச்சி நோக்கில் நவீனப்படுத்த வேண்டும். அந்த நோக்கத்தில் பசு, காளை, எருது உள்ளிட்ட அனைத்து கால்நடை களையும் பாதுகாக்க வேண்டும். பால் தரும் பசு உள்ளிட்ட எந்த கால்நடைகளையும் விவசாயத் துக்குப் பயன்படுத்தும் கால்நடைகளையும் வெட்டக் கூடாது என்று அந்தத் திருத்தம் கூறியது. அம்பேத்கர், பசு பாதுகாப்பு பற்றிய விவாதங்களே அர்த்தமற்றவை என்று கருதினார். எதிர்வாதம் செய்யாமல் வழிகாட்டும் கொள்கைப் பிரிவில் இணைக்க ஒப்புக் கொண்டார். ஆனாலும் பார்கவாவுக்கு இதில் முழு திருப்தி இல்லை. பசுவைக் காப்பாற்றுவது அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டே இருந்தார். பிறகு சேத்கோவிந்ததாஸ் என்ற உறுப்பினரும் இதே கருத்தை வலியுறுத்தினார். அப்போதுதான் அம்பேத்கர் வாய்திறந்து பதிலளித்தார். அம்பேத்கரின் அபாரமான அறிவுப் புலமைக்கு சான்று அவர் அளித்த பதில். அவர் இவ்வாறு கூறினார்:

> **"அடிப்படை உரிமைகள் மனிதர்களுக்கானதே தவிர, விலங்குகளுக்கு அல்ல" என்றார் அம்பேத்கர்.**

"தீண்டாமை சட்டப்படி குற்றம் என்று இந்த சட்டத்தில் நாம் அறிவித்திருக்கிறோம். அதைப் போலவே பசுவதையும் குற்றம் என்று அறிவிக்க வேண்டும் என்கிறார்கள். ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். தீண்டாமைக் குற்றம் நேரடியாக மனிதர்களைப் பாதிப்பதாகும். பசுவை வெட்டுவது விலங்குகளைத்தான் பாதிக்கிறது. அடிப்படை உரிமைகள் என்பவை மனிதர்களுக்கானதே தவிர, விலங்குகளுக்கு அல்ல. எனவே பசு பாதுகாப்பை அடிப்படை உரிமையாக்க முடியாது" என்றார் அம்பேத்கர்.

இந்துக்களின் மதக் கண்ணோட்டத்தில் அரசியல் நிர்ணய சபையில் இந்த விவாதம் நடக்கவில்லை. நாட்டின் எதிர்கால விவசாய வளர்ச்சி, பொருளாதாரம், விவசாயத்தை நவீனமாக்குதல் என்ற கண்ணோட்டத்தில் தான் விவாதம் நடந்தது. பசுவுக்கு மட்டுமல்ல, பயன்தரும் எந்த கால்நடைகளையும் வெட்டக் கூடாது என்றுதான் வழிகாட்டும் கொள்கையில் (48;(2) சேர்க்கப்பட்டது.

1959ஆம் ஆண்டு இதே பிரச்சினை உச்சநீதி மன்றத்துக்கு வந்தது. (முகம்மது அனீஃப் குரேஷி எதிர் பீகார் அரசு வழக்கு) 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு, பசுவதைக்கு ஒட்டு மொத்த தடை வழங்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்தது. இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கும் பொறுப்பில் இருந்தவர் - அரசியல் நிர்ணய சபையில் பசுவுக்காக வாதாடிய அதே பார்ப்பனர் பார்கவா என்பது குறிப்பிடத்தக்கது. "பால் தருவதற்கும் விவசாயத்துக்கும் பயன்படும் கால்நடைகளை வெட்டக் கூடாது என்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் பயன்படாத நிலையில் அவைகளை வெட்டக் கூடாது. முழுமையாக தடைவிதிக்க வேண்டும் என்ற வாதத்தை பொது மக்கள் நலன் கருதி ஏற்கவே முடியாது" என்று உச்சநீதிமன்றம் கூறியது.

2005இல் இதே கோரிக்கையோடு வழக்கு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி ஆர்.சி. லகோத்தி தலைமையிலான ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இதில் 5 நீதிபதிகள் சைவ உணவுக்காரர்கள். (பார்ப்பன உயர்ஜாதியினர்-ஆர்)

6 நீதிபதிகள் பசுவதையை முழுமையாக தடை செய்து மாநில அரசுகள் சட்டம் இயற்றலாம் என்று தீர்ப்பளித்தனர். அதற்கு அவர்கள் கூறிய காரணம். "காலம் மாறிவிட்டது; எனவே சமூக, பொருளாதார காரணிகளும் மாறியிருக்கின்றன. தேசத்தின் பொரு ளாதார நலன் கருதி பசுவையும் கன்றையும் பாதுகாக்க வேண்டும். அதற்கு மாநில அரசுகள் சட்டம் இயற்றுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது" என்று தீர்ப்பு எழுதினார்கடள. ஏ.கே. மாத்தூர் என்ற நீதிபதி மட்டும் மாறுபட்ட தீர்ப்பை எழுதினார்.

"ஏற்கனவே உச்சநீதிமன்றம் ஒட்டு மொத்த தடை போட முடியாது என்று வழங்கிய தீர்ப்பை இப்போது தலைகீழாகப் புரட்டிப் போடுவதற்கான அவசியமோ, தேவையோ எழவில்லை" என்று தனது தீர்ப்பை எழுதினார்.

இப்போது சில கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.

அரசியல் சட்டம் மதச் சார்பின்மையை வலியுறுத்துவதால் அம்பேத்கர், 'பசு பாதுகாப்புக்கு' மதத்தின் கண்ணோட்டத்தை ஏற்காமல் விவசாயப் பொருளாதார கண்ணோட்டத்தோடு அதை அணுகினார். அரசியல் சட்டம் அதன் அடிப்படை நோக்கத்திலிருந்து விலகிச் சென்று விடக் கூடாது என்று அவர் கருதினார். உச்சநீதிமன்றம் அரசியல் சட்டத்தின் அடிப்படையான நோக்கத்திலிருந்து விலகிப் போய் ஒரு தீர்ப்பை வழங்கியது சரியானதா? இன்றைய 'அரசியல் தேவைகளுக்காக' - அரசில் சட்டத்தின் நோக்கத்தையே திசை திருப்பி சிதைத்துவிட முடியுமா? என்ற கேள்விகளை எழுப்பியிருக்கிறது, இந்த கட்டுரை.


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535


# அம்பேத்கரிய சிந்தனைகளை ஆழமாக அலசிய கருத்தரங்கம்

"அம்பேத்கரின் அறிய வேண்டிய சிந்தனைகள்; ஆழமான புரிதலுக்கு அழைக்கிறோம்" என்ற அறிவிப்போடு வடசென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த ஏப்.23 அன்று மிகச் சிறப்பான கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. பெரம்பூர் மேம்பாலம் அருகே உள்ள 'பகுஜன் சமாஜ் கட்சி'யின் அரங்கில் இந்தக் கருத்தரங்கை நடந்த கட்சியின் தலைவர் ஆம்ஸ்ட் ராங் கழகத் தோழர் களுக்கு மகிழ்ச்சி யுடன் அனுமதி அளித்தார். அண்மை யில் திராவிடர் விடுதலை கழகத்தில் தங்களை இணைத் துக் கொண்ட பெண் தோழர்கள் சா.ராஜி, வ. சங்கீதா ஆகியோர் முன்னின்று, இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தனர். வடசென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். சா. ராஜி தலைமையில் வ.சங்கீதா வரவேற்புரையாற்ற, மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார்.




கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'அம்பேத்கரை திசை திருப்பும் சதி' எனும் தலைப்பில் அம்பேத்கர் இந்துத்துவ ஆதரவாளராக சித்தரிக்க முயலும் சங்பரிவாரங்களுக்கு பதிலளித்து. வரலாறுகளையும் அம்பேத்கர் கருத்துகளையும் முன் வைத்து, ஒன்றரை மணி நேரம் பேசினார். தொடர்ந்து எழுத்தாளர் வே.மதிமாறன், 'அம்பேத்கரின் ஜாதி ஒழிப்பு தத்துவம்' என்ற தலைப்பில் பார்ப்பனியத்தை இடைநிலை ஜாதியினர் பரப்பி வருவதையும் தீண்டப்படாத மக்கள் மாட்டுக்கறி உணவுக்குத் தள்ளப்பட்ட வரலாற்றுச் சூழல்களையும், இடைநிலை ஜாதியினரின் பார்ப்பனியத்தை எதிர்த்து, அந்த சமூகத்தினரிடமே பேசிய ஒரே தலைவர் பெரியார் என்பதையும் விரிவாக விளக்கினார்.

அரங்கு முழுதும் ஏராளமான பெண்களும், இளைஞர்களும் திரண்டிருந்தனர். நிகழ்வில் மூன்று இளைஞர்கள் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு 'நிமிர்வோம்' இதழை விடுதலை இராசேந்திரன் வழங்கினார். நா. பாஸ்கர் நன்றி கூற 9 மணியளவில் கருத்தரங்கம் நிறைவடைந்தது.

# பார்ப்பன போலிச் சடங்குகளை தோலுரித்த 'சம்ஸ்காரா' நாவல், உலகின் கவனத்தை ஈர்க்கிறது

கருநாடக பார்ப்பனர் யூ.ஆர். அனந்தமூர்த்தி எழுதிய 'சம்ஸ்காரா' என்ற நாவல் பார்ப்பனர்களின் போலிச் சடங்குகளை அம்பலமாக்கியது. பார்ப்பனர்களிடையே கடும் எதிர்ப்பை உருவாக்கிய அந்த நாவல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இப்போது உலகம் முழுதும் இளைஞர்கள் கட்டாயம் படிக்க வேண்டும் என்று இங்கிலாந்து நாட்டின் கார்டியன் பத்திரிகை பரிந்துரைத்த நாவல்களில் சம்ஸ்காராவும் இடம் பெற்றுள்ளது. இந்த நாவலின் உள்ளடக்கம் குறித்து 'தமிழ் இந்து'வில் (மார்ச் 5) வாசந்தி எழுதிய கட்டுரை இது

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை அண்மையில் சுவாரஸ்யமான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அனைத்து மாணவ உலகமும் அவசியம் படித்தாக வேண்டிய பத்துப் புத்தககங்களைத் தேர்ந்தெடுக்கும்படி பிரபல எழுத்தாளர்கள் பலரிடம் கேட்டது. ஆங்கில உலகில் அறியப்படாத ஆசியப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கச் செய்தார்கள். அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பத்துப் புத்தகங்களுள் ஒன்று கன்னட எழுத்தாளர் யூ.ஆர். அனந்தமூர்த்தியின் நாவலான 'சம்ஸ்காரா'. இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஏ.கே.ராமானுஜம். புத்தகத்தைப் பரிந்துரைத்தவர், புக்கர் பரிசு வென்ற அரவிந்த் அடிகா.

ஆங்கில மொழிபெயர்ப்பு சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் 'தி இல்லஸ்டிரேடட் வீக்லி'யில் வாராவாரம் தொடராக வெளிவந்த போது நான் படித்திருக்கிறேன். புத்தகம் வெளி வந்தவுடன் (1965) கர்நாடகத்து பார்ப்பன வகுப்பினர் நாவலைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

மிகுந்த சர்ச்சையையும் மதம், மானுட தர்மம் பற்றிய அறிவார்த்த விவாதங்களையும் ஏற்படுத்திய நாவல் என்ற சிறப்பைப் பெற்றதால் யூ.ஆர். அனந்தமூர்த்தி அவரது முதல் நாவலிலேயே ஆங்கில மொழியாக்கத்தின் மூலமாக மேற்கு நாடுகளில் வெகுவாகப் பிரபலமானார். நாவலை அவர் இங்கிலாந்தில் ஆங்கில இலக்கிய பி.எச்டி மாணவராக இருந்த போது எழுதினார். இங்மார் பர்க் மெனின் 'தி செவன்த் சீல்' என்ற படத்தைப் பார்த்து மிகவும் பாதிப்புக்குள்ளானதாகவும் அதுவே பால்யத்திலிருந்து தன் அடி மனத்தைத் துன்புறுத்திய விஷயங்களைக் கேள்வி கேட்கும் வகையில் ஒரு நாவல் எழுதத் தூண்டியதாகவும், அனந்தமூர்த்தி சொல்லியிருக்கிறார். பார்ப்பனரும் ஆச்சாரமான குடும்பத்தில் வளர்ந்த வருமான அவருக்கு, சாதி என்ற பெயரில் அனுசரிக்கப்படும் பாசாங்குத்தனங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல, இலக்கியம் ஆயுதமாயிற்று.

கார்டியன் கட்டுரையைப் படித்த பிறகு மீண்டும் அந்த நாவலை வாசித்தேன். புத்தகத்திலிருந்து பார்வையை எடுக்க முடியாமல் அனந்தமூர்த்தியின் அழுத்த மான தாக்கம் என்னை ஆட் கொண்டது. கதையோட்டம் புராண உபமானங்களை, மகாபாரதப் பாத்திரங்களை, சமகாலப் பாத்திரங்களின் நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டபடி நகர்ந்தாலும் மதம் சார்ந்த கேள்வி எழுப்பும் எழுத்தாக இருந்தாலும் கன்னட இலக்கிய நவீனத்துவத்தின் எழுத்தாகவே நாவல் முடிவில் வெளிப்படுகிறது.

1930, 40களில் நடக்கும் கதை. கற்பனை ஊர். கற்பனைக் கதாபாத்திரங்கள். பெயர்கள் நிகழ்வுகள், காலப் பரிமாணம் எல்லாமே குறியீடுகளாகத் தெரிகின்றன. ப்ளேக் என்னும் கொள்ளை நோய் பரவிய காலம். அது கொள்ளை நோய் என்று உணராமல் அது சாபக் கேடு, தண்டனை என்று மனிதன் பயப்படுவதும் குறியீடு. ஒரு "பிராம்மண" அக்ரஹாரத்தில் வாழும் பிராணே ஷாசார்யா ஆச்சார சீலர். எல்லோருக்கும் குரு. தன் சரீர சுகத்தையே நிராகரித்து வியாதிக்கார மனைவியுடன் வாழ்பவர். அதே தெருவில் வசிக்கும் நாரணப்பா, அநாச்சாரமானவன். சாஸ்திரம் சொல்வதற்கு நேர்மாறான பழக்கவழக்கங்களுடன் சந்த்ரி என்ற தாசியுடன் வாழ்ந்தவன். அவன் செத்துப்போகிறான். அதுதான் கதையின் ஆரம்பம்.

சாவின் அதிர்ச்சியைவிட அக்ர ஹாரம் மேற் கொள்ள வேண்டிய நியமம் தான் முக்கியமாகிப் போகிறது. அக்ர ஹாரத்தில் ஒரு சாவு நிகழ்ந்தால் சடலத்தை எடுத்துத் தகனம் செய்யும் வரையில் எவரும் உணவருந்தக் கூடாது. இறந்தவன் அநாச்சாரமானவன் என்று தகனம் செய்ய உறவினர்கள் மறுக்கிறார்கள். தகனம் செய்பவர்கள் செலவுக்கு இதை வைத்துக் கொள்ளலாம் என்று தனது நகைகளைத் தருகிறாள் சந்த்ரி. வீம்புடன் விலகியவர்கள் இப்போது தங்கம் கிடைப்பது தெரிந்ததும் பேச்சை எப்படி மாற்றிக்கொள்வது என்று சங்கடத்துடன் நெளிகிறார்கள்.

> **நாவல் முன்வைக்கும் பிரச்சினைகள் இன்றும் சமகால சமூகத் தளத்திலும் எழுப்பப்பட வேண்டியவை.**

கடைசியில் பிராணேஷாசாரியாரிடம் பொறுப்பை விடுகிறார்கள். சாஸ்திரங்களை ஆராய்ந்து என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள். நாங்கள் காத்திருக்கிறோம் என்கிறார்கள்.

இந்தக் காத்திருப்பில் கதை பின்னுகிறது. எல்லோரும் கட்டிக் காத்துவந்த போலி நியமங்கள் பசியிலும் காற்று வேகத்தில் பரவிய தொற்று வியாதி யிலும் குலைந்து போகின்றன. ஆச்சாரியர் காத்துவந்த சுய கட்டுப்பாடு சந்த்ரியின் ஸ்பரிசத்தில் காணாமல் போகிறது. பசி பொறுக்க முடியாமல் வேறு மடத்துச் சாப்பாட்டைச் சாப்பிடுகிறார். தர்மத்தைப் பற்றிச் சொல்லத் தமக்கு இனி அருகதை இல்லை என்று வெட்கமேற்படுகிறது.

இதற்கிடையில் நாரணப்பாவின் சடலம் சந்த்ரியின் முஸ்லிம் நண்பர்களால் யாரும் அறியாமல் எரிக்கப்படுகிறது!

எது சரி, எது தப்பு என்ற கேள்வி ஒட்டுமொத்தச் சமூகத்தை ஆட்டிப்படைக்கிறது. உண்மையில் சமூகமே ஆளுக்கொரு திசைநோக்கி ஓடி ஒளிவது போல் இருக்கிறது. எது தர்மம், எது அதர்மம் என்ற கேள்வி முதல்முறையாக ஆச்சாரியரை அலைக் கழிக்கிறது. பயணம் நீள்கிறது. அடுத்து என்ன என்ற கேள்வியுடன் முடிகிறது நாவல். பல கேள்விகள் எழுப்பிவிட்டு. இத்தகைய கேள்விகளுக்குப் பதில் ஏதுமில்லை என்பதுபோல.

### மரபும் சடங்கும் தேவையா?

நாவலில் பல பலவீனங்கள் உண்டு என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டினார்கள். மது அருந்துவது, மாமிசம் சாப்பிடுவது, வேசியுடன் படுப்பது ஆகிய நடத்தைகளைக் கொண்டாடு வதான தோற்றத்தை நாவல் ஏற்படுத்துகிறது என்று சொல்லப்பட்டது.

தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் உடல்ரீதியாக, அதிக காம உணர்ச்சியைத் தூண்டும் கவர்ச்சி உடையவர்கள் என்பது போன்ற வர்ணனை நெருடலாக இருக்கிறது என்றார்கள். அத்தனை பாண்டித்தியம் கொண்ட ஆச்சாரியருக்கு அநாச்சாரமாக வாழ்ந்தவனின் சடலத்துக்குச் சின்ன பரிகாரம் செய்து ஈமக்கிரியை செய்யலாம் என்பது கூடவா தெரியாமல் போயிற்று என்று கேள்வி எழுப்பப்பட்டது. ப்ளேக் தொற்றுநோய் கண்ட எலியைக் கழுகு கொத்திக்கொண்டு போவதாகக் கதையில் வருகிறது. காகமோ கழுகோ அதைத் தொடவே தொடாது என்பது எந்தக் கிராமத்தானுக்கும் தெரியும், அனந்தமூர்த்திக்குத் தெரியாமல் போச்சா என்றார்கள்.

இவையெல்லாம் வாசிப்பு அனுபவத்துக்கு முக்கியமல்ல. புத்தகத்தின் மொழியும், அது எழுப்பும் கேள்வியும் படிப்பவருக்கு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. நாவல் முன்வைக்கும் பிரச்சினைகள் இன்றும் சமகால சமூகத் தளத்திலும் எழுப்பப்பட வேண்டியவை என்பது முக்கியமானது. பாசாங்குத் தனங்களும் மூட நம்பிக்கைகளும் பரவலாக எல்லா வகுப்பினரிடையேயும் பல வடிவங்களில் பின்பற்றப்படும் நிலையில் 'சஸ்காரா' நாவல் முக்கியத்துவம் பெறுகிறது. மனித நேயத்தையும் புறந்தள்ளக்கூடிய சாதியக் கட்டுப்பாடுகளை உடைத் தெறியும் ஆவேசம் அனந்தமூர்த்தியின் நாவலில் இலக்கிய நயத்தோடு வெளிப் படுகிறது.

அது மிகச் சிறந்த இலக்கிய வெளிப்பாடாக மட்டுமில்லாமல் சமூக, சமயரீதியான மாற்றுக் கருத்துக்கான அவசியத்தைச் சொல்வதாகவும் (அவர் அந்த எண்ணத்துடன் எழுதாமல் இருந்திருந்தாலும்) கொள்ளலாம் என்பதாலேயே அனைத்து உலக மாணவர்களும் படிக்க வேண்டிய புதினமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## போராடும் விவசாயிகளுக்காக கழகம் போராட்டம்

13-4-17 அன்று மாலை 4-00 மணியாவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக.....கடந்த 31 நாட்களாக டெல்லி - ஜந்தரில் போராடி கொண்டிருக்கும் தமிழக விவசாயிகளை கண்டு கொள்ளாத மத்திய மோடி அரசைக் கண்டித்து பா.ஜான்மண்டேலா தலைமையில் சென்னை "கவர்னர் மாளிகை முற்றுகைப் போராட்டம்" நடைபெற்றது.

விவசாயிகளின் கோரிக்கைகளையும் ஏற்க கோரி மத்திய மோடி அரசை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் 25பேர் கைது செய்து சைதாப்பேட்டை கூ.மு. திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். பின்னர் மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்

## புதுவை கழகம் பாரூக் குடும்ப நிதியாக 2 இலட்சம் வழங்கியது

8-4-2017 அன்று புதுவை, அரியாங்குப்பம், கரும்புலி மில்லர் அரங்கத்தில், புதுவை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஃபாரூக் குடும்பநிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வுக்கு லோகு அய்யப்பன் தலைமை வகித்தார். தோழர்கள் தந்தைபிரியன், வீரா்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் முன்னரே நிதி அளித்தவர்கள் அல்லாமல் ஏராளமான பேர் நேரில் நிதி வழங்கினர். நிதியினைப் பெற்றுக் கொண்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஃபாரூக் படுகொலை, இசுலாமிய அமைப்புகளின் தொடர்வினை, வழக்கின் தன்மை போன்ற வற்றை விளக்கிப் பேசினார்.

அந்நிகழ்வில் ரூ.1,84,100/- வழங்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் ரூ.15,900/- அனுப்பி மொத்த நிதியை ரூ.2,00,000/-மாக முழுமைப் படுத்தினர்.

## ஆந்திர காவல்துறையால் கொலையான 20 அப்பாவித் தமிழர் நினைவு நாள்

செம்மரக் கடத்தல் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரால், ஆந்திர காவல், வனத்துறை அதிகாரிகளால் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டு, ஆந்திர வனப்பகுதிக்குள் கொண்டு சென்று 20 அப்பாவிக் கூலித் தொழிலாளர்கள் 6-4-2015 அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களது இரண்டாம் ஆண்டு நினைவாய் 7-4-2017 அன்று மாலை, தருமபுரி வள்ளலார் திடலில் மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் மற்றும் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு அமைப்பு, கட்சித் தலைவர்களை ஒருங் கிணைத்து பொது உரையாடல் நடை பெற்றது.

கலை நிகழ்வுகளுடன் தொடங்கிய அந்நிகழ்வில் மக்கள் கண்காணிப்பகத்தின் செயல் இயக்குநர் வழக்கறிஞர் ஹென்றிதிபேன் தேசிய மனித உரிமை ஆணையத்தின் ஆணைகள், திருப்பதி, ஆந்திர உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் நடந்து கொண்டுள்ள வழக்கின் நிலவரம், தேவைப்படும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக உரையாற்றினார்.

அந்நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர்மணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், ம.தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தித் தொடர்பாளர் வன்னிஅரசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டெல்லிபாபு, இயக்குநர் களஞ்சியம், தமிழர் முன்னேற்றப் படைதலைவர் கி.வீரலட்சுமி, வழக்கறிஞர்அசோகன், துஇசக்கிமுத்து, வழக்கறிஞர் இரவி ஆகியோர் உரையாற்றினர்.

போலி மோதலில் பலியான 20 தமிழர்களின் குடும்பத்தினரும் எராளமான பொதுமக்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மார்க்கத்தையும் இயக்கத்தையும் பிரித்துப் பார்க்க வேண்டும்!

திராவிட இயக்கங்களுக்கும் இஸ்லாமி யர்களுக்குமிடையே கடந்த காலங்களில் தலைவர்கள் கட்டிக் காத்த நல்லுறவை குலைத்துவிட கூடாது என்று 'எஸ்பிஇசட்-ஈமெகசைன்' என்ற இணைய ஏடு வெளியிட்டுள்ள கட்டுரை.




"பகுத்தறிவுச் சிங்கம்" ஈ.வெ.ரா. பெரியார். தமிழகத்தில் திராவிடர்களுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் மத்தியில் இவ்வளவு ஆழமான உறவு இருப்பதற்கு, பெரியாரின் கொள்கைகளே காரணம். பெரியார் எதை எதிர்த்து தன் வாழ்நாள் முழுவதும் போராடினாரோ அவையனைத்தும் இஸ்லாத்தில் இயல்பாகவே தடை செய்யப்பட்டு இருந்தது. பெரியார் எதை வலுவாக ஆதரித்தாரோ அவை இஸ்லாத்தில் இயல்பாகவே வலியுறுத்தப்பட்டிருந்தது.

தீண்டாமையை எதிர்த்தார். இஸ்லாத்தின் இயல்பிலேயே தீண்டாமை இல்லை. மாறாக அனைவரையும் அரவணைக்கும் குணாதிசயம் இருந்தது. குறிப்பிட்ட இனத்தவர்கள்தான் இந்த சாலையில் நடக்க வேண்டும். பிற இனத்தவர் இந்தப் பக்கமே வரக்கூடாது என்றிருந்தபோது இரண்டு இஸ்லாமியர்கள் ஒருசேர அமர்ந்து ஒரே தட்டில் இருவரும் சேர்ந்து சாப்பிட்டது பெரியாரை ஈர்த்தது.

குறிப்பிட்ட இனத்தவர்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்றிருந்தபோது பக்கீர்கள் முதல் பணக்காரர்கள் வரை ஒரு அணியில் நின்று தோளோடு தோள் உரசி இறைவனை வணங்கிய காட்சி பெரியாரை ஈர்த்தது. நீ வேறு நான் வேறு. என்றைக்கும் நாம் இருவரும் ஒன்றாக மாட்டோம் என்றிருந்தபோது அனைவரும் சகோதரர்களே என்ற இஸ்லாத்தின் சகோதரத்துவம் பெரியாரை ஈர்த்தது. இப்படி பலவற்றைச் சொல்லலாம். பெரியாரின் கருத்தியலும் இஸ்லாத்தின் கருத்தியலும் ஒரு புள்ளியில் இணைந்தது. அதன் தொடர்ச்சியாக, பெரியார் பல மேடைகளில் இஸ்லாத்தைச் சிலாகித்துப் பேசினார்.

பெரியார் இஸ்லாத்தைப் பற்றி அறிந்த காலத்தில் குர்ஆன் மொழிபெயர்ப்பு இல்லை. பெரிய அளவில் நூல்களும் இல்லை. ஆனால் பெரியார் இஸ்லாத்தை தெரிந்துகொண்டார். மௌலவி. அப்துல் ஹமீது பாகவி அவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டார். இஸ்லாத்தின் ஆழமான கொள்கைகளைக் கண்டு வியப்படைந்தார்.

பல இஸ்லாமியர்கள் பெரியாரோடு இணைந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடினார்கள். பெரியாரை இறை மறுப்பாளர் என்று குறுகிய வட்டத்தில் சுருக்காமல், சக மனிதனின் சுயமரியாதையை காப்பாற்றும் போராளியாக பார்த்து பல முஸ்லிம் தலைவர்கள் அவரோடு கைகோர்த்தனர்.

முதன் முதலில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விழா எடுத்த முஸ்லிம் அல்லாத தலைவர் பெரியார் தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்தார்.

காயிதே மில்லத் அவர்கள் திராவிட இயக்க தலைவர்களோடு மிகுந்த ஆழமான தோழமை கொண்டிருந்தார். சமூக நலனுக்காக அரசியலில் அவர்களோடு சேர்ந்து களப்பணியாற்றினார். காயிதே மில்லத் அவர்கள் மறைந்தபோது இறுதிச் சடங்கில் பங்கேற்ற பெரியார், இனிமேல் இந்த சமூகத்தை யார் காப்பாற்றுவார். நான் மறைந்து இவர் வாழ்ந்திருக்கக்கூடாதா என்று குமுறி அழுதார். பெரியார் மட்டுமல்ல. கலைஞர், எம்.ஜி.ஆர் போன்ற பல திராவிட இயக்க தலைவர்களும் கலந்து கொண்டனர்.

பெரியாரின் கொள்கைகளை பாடல் வாயிலாக தமிழகம் முழுவதும் பரப்பினார் நாகூர் ஹனீபா. பெரியார் நாகப்பட்டினம் பக்கம் வரும்போதெல்லாம் ஹனிபாவை அழைத்து பாடச் சொல்லி கேட்டிருக்கிறார். "ஹனிபா ஐயாவுக்கு மைக்கே தேவையில்லை" என்று புகழ்ந்திருக்கிறார். பல மேடைகளில் நாகூர் ஹனிபா அவர்களின் திராவிடக் கொள்கை பாடல்கள் ஓங்கி ஒலித்திருக்கிறது.

நாகூர் ஹனிபா அவர்கள் எந்தளவிற்கு திராவிட இயக்கத்தோடு தன்னை ஈடுபடுத்திருயிக்கிறார் என்பதை நாகூர் ஹனிபா அவர்கள் இறந்த பிறகு அவரின் உடலைப் பார்க்க வந்த கலைஞர் "என்னுடைய ஆருயிர் தோழரை இழந்து தவிக்கிறேன்" என்று கண்கலங்கிய காட்சி மூலம் காணலாம். இதுபோன்று இஸ்லாமியத் தலைவர்கள் பல பேர் திராவிட இயக்கத்தோடு நல்லுறவு பேணி சமுதாயத்திற்காக போராடினார்கள். அவரவர்கள் ஏற்றுக் கொண்ட மார்க்கத்தையும் திராவிட இயக்கத்தோடு உள்ள தோழமையையும் சேர்த்து குழப்பிக் கொள்ளவில்லை. எந்த இடத்திலும் காயிதே மில்லத் தன் மார்க்கத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அதே நேரம் சமூக நலனுக்காக திராவிட இயக்கங்களையும் கைவிடவில்லை. மார்க்கத்தையும் இயக்கத்தையும் தனித் தனியாக பிரித்தறிந்து செயல்படும் அளவிற்கு முதிர்ச்சிப் பெற்றிருந்தார்கள்.

பெரியார் மற்றும் பிற திராவிடத் தலைவர்களுக்கும் இஸ்லாத்தில் சில விமர்சனங்கள் இருந்தது. ஆனால் அது அவரவர் நிலைபாடு. அவர்கள் அவர்களுடைய நிலைபாட்டில் இருந்தார்கள். முஸ்லிம் தலைவர்கள் அவர்களுடைய நிலைப்பாட்டில் இருந்தார்கள். மக்களுக்காக சேர்ந்து போராடினார்கள்.

காயிதே மில்லத் என்றால் நமக்கு நினைவுக்கு வருவது தொப்பியும் தாடியும் தான் ஆனால் அதே உருவம் தான் அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக இருந்தது. நாகூர் ஹனிபா மார்க்கத் திற்காக தன்னை வளைக்கவில்லை. பல கட்டங்களில் உடனிருந்த பல பேர் கலைஞருக்கு தன் முதுகை வளைத்து மரியாதை செலுத்துவார்கள். ஆனால் நாகூர் ஹனிபா நெஞ்சை நிமிர்த்தி மரியாதை செலுத்தினார்.

இறைவனே இல்லை என்ற கொள்கையிலிருப்பவர்களும் ஒரே இறைவன் என்ற கொள்கையிலிருப்பவர்களும் ஒன்று சேர்ந்து மக்களுக்கான அரசியலை கையிலெடுத்திருக்கிறார்கள். அதனால் காயிதேமில்லத் அவர்களோ, நாகூர் ஹனீபா அவர்களோ மார்க்கப்பற்று இல்லாதவர்களா? எந்த இடத்திலும் முஸ்லிம் தலைவர்கள் மார்க்கத்தையும் இயக்கத்தையும் குழப்பிக் கொண்டதில்லை. ஆனால் இன்று நம் சமூகம் குழப்பிக் கொண்டிருக்கிறது. யாரோடு சேர்ந்து போராட வேண்டுமோ அவர்களோடு மார்க்கக் கொள்கைகளைக் கொண்டு மோதலாமா? அல்லது மார்க்கம் இதைத் தான் வழிகாட்டுகிறதா?

திராவிட இயக்கங்களுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்குமான உறவு மிக நீண்ட பாரம்பரியம் கொண்டது. மிக வலிமையான அடித்தளத்தை கட்டமைத்து வைத்திருக்கிறார்கள் முஸ்லிம் முன்னோர்கள். முஸ்லிம் சமூகத்திற்கு ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தது என்றால், உடனுக்குடன் வரிந்து கட்டி வந்து கைகோர்ப்பவர்கள் திராவிட இயக்கத் தோழர்கள். இன்றைய அரசியல் சூழலில் தற்போது இருக்கும் உறவைவிட இன்னும் வலிமைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

பாபர் பள்ளிவாசல் இடிக்கப்பட்டபோது, இந்தியாவின் பல மாநிலங்களில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியானது. ஆயிரக் கணக்கில் பொருட்சேதங்களும் உயிர்சேதங்களும் ஏற்பட்டது. ஆனால் தமிழகத்தில் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. பாபர் பள்ளிவாசல் இடிக்கப்பட்டதை எதிர்த்து தமிழகத்தின் பிற சமயத்தவர்கள் குரல் கொடுத்தார்கள். இவ்வளவு வலிமையான ஒரு சமூகம் உருவானதற்குக் காரணம் திராவிட இயக்கங்கள் தானே!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வைத்து பொதுவிடங்களில் பாட்டு, நடனம் என்று ஒலி பெருக்கியை அலறவிடுகிறார்கள். மக்களுக்கு பெரும் தொல்லை தருகிறது. நான் இப்போது எழுப்பும் கேள்வி சமூகம் சார்ந்தது. மதம் சார்ந்தது அல்ல. நான் அரசியலில் இடதுசாரியும் அல்ல; வலதுசாரியும் அல்ல; இரண்டுக்கும் இடைப்பட்டவன். இந்த நிலைப்பாடுதான் என்னை மைனாரிட்டியாக்கி யிருக்கிறது. வன்முறை மிரட்டலுக்கு எதிராக இப்போது நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த மிரட்டலுக்கு எதிராக நான் போராட்டம் நடத்தப் போவது இல்லை. அந்த இஸ்லாமிய மதகுருவுக்கு சவால் விடவும் விரும்பவில்லை. மதவெறிக்கு அச்சுறுத்தலுக்கு எதிராக அமைதியான எனது எதிர்ப்பை பதிவு செய்கிறேன். எனக்கு மொட்டை அடித்தவரே ஒரு இஸ்லாமியர்தான். அதை அவர் வெறுப்புணர்வுடன் செய்யவில்லை. அன்போடு செய்தார்" என்றார் நிகாம்.

இதற்குப் பிறகு இஸ்லாமிய மதகுரு கல்கத்தாவில் உள்ள தனது இல்லத்திலிருந்து செய்தியாளர்களை சந்தித்தார். "நான் விதித்த அனைத்து நிபந்தனைகளையும் நிகாம் முழுமையாக நிறைவேற்றவில்லை. மொட்டை மட்டுமே அடித்திருக்கிறார். கிழிந்த செருப்பை மாலையாகப் போட்டுக் கொண்டு இந்தியாவிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் அந்த கோலத்தில் சென்று வரவேண்டும் என்ற நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை. எனவே ரூ.10 இலட்சத்தை தர முடியாது. நான் 'பேத் வா' (மதக் கட்டளை) எதையும் பிறப்பிக்கவில்லை. அறிவிப்புதான் செய்தேன்" என்றார் மவ்லவி.

"அப்படியானால் நீதிமன்றம் போயிருக்கலாமே?" என்று செய்தியாளர்கள் கேட்டனர். "நிகாம் நீதிமன்றம் போகவில்லை. எனவே நானும் போகவில்லை" என்றார் இஸ்லாமிய மதகுருவான மவ்லவி.

உச்சநீதிமன்றம் இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை மத நிகழ்வுகள் என்ற பெயரால் ஒலிபெருக்கிகளை அலறவிடக்கூடாது என்று ஏற்கனவே தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இந்திய அரசியல் சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துரிமை வழங்கியிருக்கிறது. அந்தக் கருத்துரிமையை ஏற்க மறுக்கிறது மதவாதம். குற்றம் செய்தவர்களை தண்டிக்க இந்திய தண்டனைச் சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தையும் மதிக்காமல், நேரடியாகவே தண்டனை வழங்குகிறது மதவாதம். இது மதச் சார்பற்ற நாடு தானா?

## குமரி மாவட்டக் கழகம் நடத்திய அம்பேத்கர் – மார்க்ஸ் பிறந்த நாள் விழாக்கள்



திராவிடர் விடுதலைக் கழகம், பெரியார் தொழிலாளர் கழகம், குமரி மாவட்டம் சார்பாக அம்பேத்கர், காரல் மார்க்சு பிறந்த நாள் விழா மற்றும் தொழிலாளர் தினவிழா மந்தாரம் புதூரில் நடைப் பெற்றது. பாரூக் வீரவணக்க கொடிக் கம்பம் நடப்பட்டு பால்பிரபாகரன் கழகக் கொடியேற்றி வீரவணக்க முழக்கங்கள் எழுப்பினார். பொதுக்கூட்டத்தில் நீதி அரசர் தலைமையுரையாற்றினார். ஜாண் மதி வரவேற்புரையாற்றினார். தோழர்கள். தமிழ் மதி, ஜாண் முரே ஆகியோர் சிறப்புரையாற்றினர். பால் பிரபாகரன்(கழகப் பரப்புரைச் செயலாளர்)சாதி ஒழிப்பில் பெரியாரும் அம்பேத்கரும் என்ற தலைப்பில் உரையாற்றினார். பால் பிரபாகன் பேசிய உரையிலிருந்து வினா விடைப் போட்டி நடைபெற்றது. அதில் முதல் பரிசு ரூ.1000-ம், பெரியார் கோப்பையும் ஆதிராவும், இரண்டாவது பரிசு ரூ.500-ம், பெரியார் கோப்பையும். அனுசிகாவும் பெற்றனர். கைப்பந்து போட்டிகளில் கலந்துக்கொண்டு திறமைகளை வெளிக்கொணரும் சிவசங்கரியைப் பாராட்டி பெரியார் கோப்பை பரிசாக வழங்கப்பட்டது. பெரியார் புத்தகங்களும் பரிசாக வழங்கப்பட்டன. பள்ளிப் பிள்ளைகள் 10பேருக்கு இலவசகுறிப்பேடுகள் வழங்கப்பட்டது. விஷ்ணு நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சிகளை மணிமேகலை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் தோழர்கள் சூசையப்பா, மஞ்சு குமார், இளங்கோ, அன்பரசு, மாசிலா மணி, அனீஸ், சுனில் குமார், இராஜேஸ் குமார், இராஜன், வின்செண்ட், பால் ராசு, சந்திரசேகர், அருள் குமார், இரமேஸ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th April 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN